**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 433/2025**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **லோகநாதன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | பாண்டி | **Calling** | : | **கூலி** |
| **Village** | : | **NGO காலனி** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **37** |
| | | | **Dated** | : | **12.11.2025.** |

**12.11.2025.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–4 திரு. **லோகநாதன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் NGO காலனியில் குடியிருந்து நாகா ப்ளோர் மில் எதிரே உள்ள பாரில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த குமார் என்பவரை தெரியும். அவர் என்னுடன் பாரில் வேலை செய்தார். சுமார் 2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 8 மணி

இருக்கும் அப்போது குமார் என்னுடன் பாரில் வேலை செய்து கொண்டிருந்தபோது டீ சாப்பிட்டு வருவதாக கூறிவிட்டு சென்றார். அப்போது சத்தம் கேட்டது. நானும் சுந்தரராஜனும் வெளியே வந்து பார்த்தபோது, தலையில் காயம் பட்டு கிடந்தார். இருசக்கர வாகனம் இடித்து அடிப்பட்டு கிடந்தார். குமார் தெற்கிலிருந்து வடக்கு திசை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது கிழக்கிருந்து மேற்குநோக்கி வந்த ஸ்பிலண்டர் இருசக்கர வாகனம் மோதிவிட்டது. இருசக்கர வாகனத்தை ஓட்டியவரை பார்த்தால் அடையாளம் காட்ட தெரியாது. ஆஜர் எதிரியை தெரியுமா என்றால் சம்பவம் நடந்த இடத்தில் 15 பேர் நின்று கொண்டிருந்தனர். ஆஜர் எதிரியும் நின்று கொண்டிருந்தார். குமாருக்கு தலையில் காயம் பட்டிருந்தது. காயம் பட்ட குமாரை 108 ஆம்புலன்சில் திண்டுக்கல் அரசு மருத்துவமணைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>அரசு தரப்பில் பகுதி பிறழ் சாட்சியாக அனுமதி கோரப்பட்டு பகுதி பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.</u>

நான் போலிசார் விசாரணையில் கடந்த 27.01.2023 ம் தேதி மாலை 8.30 மணிக்கு நான் வேலை செய்யும் டாஸ் மாக் பார் முன்பாக நானும் சுந்தரராஜ் ம் நின்று கொண்டிருந்த போது இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த குமார் திண்டுக்கல் திருச்சி மெயின் ரோட்டில் கிழக்கிருந்து மேற்கு நோக்கி இடது பக்கமாக மதுபான கடை பிரிவின் முன்பு நடந்து வந்து கொண்டிருந்த போது TN 38 W 0587 ஸ்பிலன்டர் இருசக்கர வாகனத்தை மேற்கிருந்து கிழக்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்த ஆஜர் எதிரி, குமார் மீது மோதி விட்டார் எ ன்றும், இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும், சம்பவம் நடந்த மறுநாள் திண்டுக்கல் அரசு மருத்துவமணைக்கு சென்று குமாரை பார்த்தாக கூறிவிட்டு, தற்போது சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தாகவும், இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபரை தெரியாது என்றும் பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் பாரின் உள்ளே இருந்தேன் என்றாலும், சத்தம் கேட்டுதான் வந்து பார்த்தேன்

என்றாலும் சரிதான். போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.11.13 10:16:08 +0530

Judicial Magistrate No.I

Dindigul.